கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.
நாள். 31.07.2025.

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 53/2019**

2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 31ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இலட்சுமி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | பாலகிருஷ்ணன் | வயது | : | 56 |
| ஊர் | : | உக்கல், பெண்டை கிராமம் | தொழில் | : | கோழி பண்ணை |

**பி.சா.1 (இலட்சுமி): பிரதிவாதிகள் தரப்பில் முதல் சாட்சியின் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:**

நான் இவ்வழக்கில் பிரதிவாதியாவேன். மனை எண்கள் 14,15,19,21 ஆகியவைகளின் ஐக்குபந்திகள் 63 நபர்களுக்கு அளிக்கப்பட்ட மற்ற பட்டா எண்களை ஐக்குபந்திகளாக காண்பித்துதான் மேற்படி கிரையம் ஆவணம் வாங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எழுத படிக்க நன்கு தெரிந்தும் இந்த வழக்கிற்காக படிக்க தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பட்டாவானது வாதியின் கணவர் செல்வமணிக்கு வழங்கப்பட்டுள்ளதில் தான் நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தில் கட்டியுள்ள வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் 781 ஆகும். மேற்படி சர்வே எண் 781 கொண்ட சொத்தானது யார் பெயரில் உள்ளது என்றால் அது எனது பாட்டனார் சொத்து ஆகும். பாட்டனார் சொத்து என்பதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆமாம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணங்கள் ஏதும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி நான் கட்டிய வீடு சர்வே எண் 781 -ல் வரவில்லை என்றும் சர்வே

எண் 782/1-ல் தாவா சொத்தானது முதலில் அரசு பொறம்போக்கு நிலமாக இருந்தது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 63 பட்டாக்களில் எனக்கு அளிக்கப்பட்ட 42 வது மனையின் பட்டாவின் ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை. இந்த வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றும் பட்டா என்னிடம் உள்ளது என்பதை மறைத்து பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கு தொடர்ந்த பிறகு பட்டா என்னிடம் உள்ளதா என்று தேடி பார்த்தேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா சொத்தை அளந்த போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். மேற்படி தாவா சொத்து முழுவதுமே என்னால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு என்னால் வீடு கட்டப்பட்டுள்ளது என்று நீதிமன்ற ஆணையரால் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியும். ஆரம்பத்தில் வாதி தாவா சொத்தில் ஒரு பகுதி மட்டுமே ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளார் என்றும் அதன்பிறகு நீதிமன்ற ஆணையர் மற்றும் சர்வேயர் மூலம் அளந்து பார்க்கும் போது தாவா சொத்து முழுவதும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அதன் படி தாவா திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

**(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பாாத்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

K NALEENI Digitally signed by K NALEENI Date: 2025.08.31 11:33:17 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
செய்யாறு